# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - ஜூன் 2017

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**6**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- ✸ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- ✸ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- ✸ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ✸ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- ✸ விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ✸ செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

e-Thaksalawa The National e-learning Portal for The General Education

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

✣ **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

01) நாங்கள் எல்லோரும் கல்விச் சுற்றுலாவின் போது குதூகலத்துடன் பாடிக்கொண்டே சென்றோம். பேருந்து சிறிது தூரம் சென்றதும், மலைக்குன்றுகள் அங்குமிங்கும் தெரியத் தொடங்கின. "வரக்காப்பொல" என்ற இடத்தை அடைந்ததும் பெரியமலைத் தொடர்களைக் காணக்கூடியதாக இருந்தது. நாங்கள் முதலில் இறப்பர் தொழிற்சாலைக்குச் சென்றோம். அங்கே மரங்களில் இருந்து சேகரித்த வெண்ணிறமான பாலை இயந்திரங்களின் உதவியுடன் இறப்பர் தட்டுக்களாக மாற்றுவது எங்களுக்கு வியப்பாக இருந்தது.

**கேட்கப்பட்ட** (i - v) **வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i. பெரிய மலைத்தொடர்களை எங்கே கண்டனர்?

.................................................................................................................................

ii. தன்மைப் பன்மை வினைச்சொல் ஒன்றை எழுதுக.

.................................................................................................................................

iii. பொருட்களை உற்பத்தி செய்யும் இடத்தை அழைக்கும் தனிச்சொல்லை எழுதுக.

.................................................................................................................................

iv. பந்தியில் குறிப்பிடப்பட்ட இணைமொழியை எழுதுக.

.................................................................................................................................

v. "ஆச்சரியமாக" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

.................................................................................................................................

vi. "வெண்ணிறம்" என்பதை பிரித்தெழுதுக.

.................................................................................................................................

(6 x 1 = *06* புள்ளிகள்)

02) **அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

i. மாகாணத்தை நிர்வகிப்பவர் ........................................................................ (ஆழுனர் / ஆளுநர்)

ii. சனக்கூட்டம் மெல்ல மெல்லக் கலையத் ....................................... (தொடங்கியது / தொடங்கின)

iii. சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட மான் ஓடி ..................................................... (ஒழிந்து / ஒளிந்து) கொண்டது.

(3 x 1 = *03* புள்ளிகள்)

03) **பின்வருவரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளை எழுதுக.**

i. தாகம் :..........................................................................

ii. நுங்கு :.......................................................................... (2 x 1 = *02* புள்ளிகள்)

04) **தொடக்கத்தில் தரப்பட்ட சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. நித்திரை - (கங்குல் / துயில் / குளவி)


ii. தானம் - (பனுவல் / மகவு / ஈகை) (2 x 1 = *02* புள்ளிகள்)

**05)** **குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புக.**

**இடமிருந்து வலம் →**

1. மீன் பிடிப்பவனை இவ்வாறு அழைப்பர்
2. யானை விரும்பி உண்பது

**↓ மேலிருந்து கீழ்**




3. பயற்றின் உள்ளீடு இது (3 x 1 = 3 புள்ளிகள்)

**06)** **பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வடிவத்திற்கு மாற்றி எழுதுக.**

i. பாதையில் பாறாங்கல் விழுந்து கிடந்தது

........................................................................................................ (1 x 1 = 1 புள்ளி)

**07)** **தரப்பட்டுள்ள மரபுத் தொடர்களுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்து எழுதுக.**
**(சொல் தவறுதல், ஏமாற்றுதல், பிடிவாதம், தோற்றப்பொலிவு)**

i. குரங்குப்பிடி - ........................................................................................................

ii. காது குத்துதல் - ........................................................................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

**08.** **கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

i. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் ........................................................................

ii. இரு பகுதியினரிடையே ஒரு விடயம் பற்றி ஏற்படும் இணக்கம் ..............................................

(2 x 1= 2 புள்ளிகள்)

**09.** **விடை எழுதுக.**

i. "உழவுத் தொழில் / விவசாயம்" என்பதைச் சிறப்பித்துக் கூறும் பழமொழி ஒன்று தருக.

........................................................................................................

ii. இராமன் அடியற்ற மரம் போல "**விழுந்தான்**." என்பதில் வந்துள்ள உவமானத்தை எழுதுக.

........................................................................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

**10.** **பின்வரும் பாடல் வரிகளைப் பூர்த்தி செய்க.**

i. சீறிக் காற்றும் எழுந்தது
சேர்ந்து மழையும் பொழிந்தது
பாறிமரமும் வீழ்ந்தது

........................................................................


ii. உன்னுயிரைப் போல - இந்த
உலகில் உயிரை யெல்லாம்


........................................................................
மதித்து வாழவேண்டும்.

(2 x 1= 2 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

**11.** **அ. பின்வரும் உருக்களின் ஆங்கிலப் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.**

i.  ____________

ii.  ____________

(2x1 = 2 புள்ளிகள்)

**ஆ. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்தில் எழுதுக.**

இங்கே வாருங்கள் ........................................................................................ *(1 x 1= 1 புள்ளி)*

**12.** **பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களின் உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.**

i. வெள்ளிக்கிழமை - ..........................................................................

ii. எழுதுங்கள் - .......................................................................... (2 x 1 = 2 புள்ளிகள்)

**13.** **பின்வரும் சிங்கள வாக்கியத்தின் தமிழ்க்கருத்தை தமிழில் எழுதுக.**

i. ம(ட்)ட பொ(த்)த (D) தென்ன ..........................................................................

ii. பஸ் எ(க்)க ஆவா ..........................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**14.** ஒரு நாட்டின் இயற்கை தந்த அருங்கொடையாக காடுகள் விளங்குகின்றன. பல்வேறு பயன்களைத் தரும் காடுகளை மனிதன் அழித்து வருகின்றான். "**காடுகளின் பயன்கள்**" என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருப்பதோடு எழுவாய் பயனிலை தொடர்புடைகளும் சரியாக அமைதல் வேண்டும்.

1. ..........................................................................

..........................................................................

2. ..........................................................................

..........................................................................

3. ..........................................................................

..........................................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)

✣ **15 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையைக் கணித்து எழுதுக.**

**15.** 40093 என்பதைச் சொற்களில் எழுதுக. ..........................................................................


**16.** 

i. மரத்திலுள்ள மின்விளக்குகளின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக.


..........................

ii. 'XIX' என்பதை இந்து அராபிய எண்ணில் எழுதுக.

..........................................................................

17.  இவ்வுருவில் செங்கோணமல்லாத கோணங்களின் எண்ணிக்கை யாது?

..................................................

18. 

i. இத்தாளை வெட்டி ஒட்டுவதன் மூலம் கிடைக்கும் திண்ம உருவின் பெயர் யாது? ......................................................................

ii. அதன் உச்சிகள் எத்தனை? ....................................

19. காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்த புகையிரதம் *2* மணித்தியாலயம் *30* நிமிடம் பயணித்து பிற்பகல் *10.10* மணிக்கு வவுனியாவை அடைந்தது.

i. புகையிரதம் வவுனியாவை வந்தடைந்த நேரத்தை நியம நேரமாக எழுதுக.

.................................................................


ii. புகையிரதம் பயணிக்க ஆரம்பித்த நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதுக.

.................................................................

20. i. $\frac{1}{2}$ இன் சமவலுப்பின்னத்தை எழுதுக. .............................................

ii. $1\frac{7}{10}$ என்பதை தசம எண்ணில் எழுதுக. ...........................................

21. *12* பென்சில்கள் வீதமுள்ள நான்கு பெட்டிகளும், *6* பென்சில்கள் வீதமுள்ள ஒன்பது பெட்டிகளும் உள்ளன. அங்குள்ள பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது? ........................................................

22. 


i. இவ்வுருவின் சுற்றளவு யாது? .......................................................

ii. இவ்வுருவின் பரப்பளவானது யாது?


..........................................................................................................


23. தரப்பட்ட எண்கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i. *7, 14, 21, 28,* ................ ii. *37, 33, 29, 25,* ............

24. குமரனிடம் *810* பென்சில்கள் உள்ளன. ஒருவருக்கு *4* வீதம் கிடைக்குமாறு எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்? ............................... மீதி எத்தனை? .............................

25. வரிப்படத்தின் உதவியுடன் பூசணிக்காயின் நிறையை கிராமில் தருக. ......................




26. 4 சவர்க்காரக்கட்டிகளின் நிறை 480g எனின் 7 சவர்க்காரக்கட்டிகளின் நிறை யாது? .........................

27. மூன்று லீற்றர் கொள்ளளவுடைய பெரிய வெற்றுப்பாத்திரத்தை *700ml* கொள்ளளவுடைய சிறிய பாத்திரமொன்றால் கவனமாக ஐந்து தடவைகள் ஊற்றி நிரப்பும்போது சிறிய பாத்திரத்தில் எஞ்சும் நீரின் அளவு யாது? .............................

28. i. உருவில் நிழற்றிய பகுதியை தசம எண்ணில் எழுதுக. ............................



ii. நிழற்றப்படாத பகுதியை பின்னமாக எழுதுக. .....................................

(14 x 2 = 28 புள்ளிகள்)

✣ **விலைப்பட்டியலை அவதானித்து 29ம், 30ம் வினாக்களுக்கு விடை தருக.**

| பொருள் | அளவு | 1kg இன் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| அரிசி | 500g | 77 | 00 | .................... | ............ |
| சீனி | 1 kg | 98 | 00 | .................... | ............ |
| தேயிலை | 150g | 340 | 00 | .................... | ............ |
| | | | மொத்தம் | | |

29. விலைப்பட்டியலைப் பூரணப்படுத்துக. (2 புள்ளிகள்)

30. மேலுள்ள பொருட்களை வாங்கிக் கொண்டு ரூபாய் 500/= கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது? .................................................... (2 புள்ளிகள்)

✣ **31 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**




31. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?
i. அன்னமுன்னா ii. கொன்றை iii. றம்புட்டான் iv. முள்முருக்கு

32. தாவரங்களை மட்டும் தனது உணவுத் தேவைக்காக நம்பியிருக்கும் பிராணி
i. நாய் ii. கோழி iii. மரை iv. காகம்

33. பின்வரும் பூக்களில் மஞ்சள் நிறப்பூ எது?
i. காட்டுமல்லிகை ii. பிறைப்பூ iii. கத்தரிப்பூ iv. பூவரசு

34. மத்திய மலைநாட்டின் எழில் கொஞ்சும் நகரம் எது?
i. மன்னார் ii. சிகிரியா iii. சிலாபம் iv. நுவரெலியா

35. கழிச்சல் நோயை உண்டாக்கும் பிராணி எது?

i. 
ii. 
iii. 
iv. 

36. துணியைச் சுருக்கித் தைக்க உதவும் தையல் வகை எது?
i. சங்கிலித்தையல் ii. சிறிய நூலோடி iii. விஸ்பம் iv. சோம் தையல்

37. அண்மைக்காலத்தில் தென்பகுதி மக்களை அதிகமாகப் பாதிப்படையச் செய்த இயற்கை அனர்த்தங்கள் எவை?
i. நிலநடுக்கமும் மண்சரிவும் ii. மண்சரிவும் வெள்ளப்பெருக்கும்
iii. சுனாமியும் நிலநடுக்கமும் iv. நிலநடுக்கம் மற்றும் வெள்ளப்பெருக்கு

38. சிறந்த நுட்பங்களுடன் கூடிய வியாபார நிலையத்தை உணர்த்தும் நிர்ணயக் குறியீடு
i. SLIM ii. SLS iii. SLDA iv. ISBN

39. நீதிமன்றத்திற்கு முன்னால் காணப்படும் வீதிக் குறியீடு எது?

i. 
ii. 
iii. 
iv. 

40. மின்மணியில் காணப்படும் காந்த வகை எது?
i. நிலையான காந்தம் ii. மின்காந்தம்
iii. சட்டக்காந்தம் iv. குண்டுமுனைக்காந்தம்

41. இலங்கையில் மருந்துப் பொருட்களை விற்பகை செய்யும் அரச நிறுவனம்
i. ஒசுசல ii. சதோச iii. சலுசல iv. கோப்சிற்றி

42. வளர்ந்த ஒருவரின் அடையாள அட்டை காணாமல் போனால் புகார் செய்யவேண்டிய இடம் எது?
i. தபாற்கந்தோர் ii. பொலிஸ் நிலையம்
iii. கிராம சேவகர் iv. பிரதேச செயலகம்

43. ஓடும் நீரைப் பயன்படுத்தி பிராணிகளை விரட்டுவதற்காக அமைக்கப்படும் செயற்பாடு
i. நீர்ச்சுழலி ii. காற்றாலை iii. நீர்ப்பிசாசு iv. நீர்ச்சக்கரம்


44. பேருந்து ஒன்றில் ஆசனம் ஒதுக்கப்படாத தொகுதியினர் யார்?
i. மதகுருமார் ii. வலது குறைந்தோர்
iii. கர்ப்பிணித் தாய்மார் iv. வயது குறைந்தோர்

45. வித்துக்களை நீக்காது உணவுக்குப் பயன்படும் காய் வகை?
i. பூசணி ii. வட்டுக்கத்தரி iii. போஞ்சி iv. வெள்ளரிக்காய்

46. 


இக் குறியீடு உணர்த்துவது
i. தீப்பற்ற வைப்பது ஆபத்தானது
ii. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
iii. எரிபொருள் நிரப்பு நிலையம்
iv. ஒலிம்பிக் விளையாட்டு

47. அரச இலச்சினையில் உலக நிலைப்பாட்டைக் குறிப்பது
i. சூரியன் சந்திரன் ii. நெற்கதிர் iii. கலசம் iv. தர்மச்சக்கரம்

48. 

இப்படம் கூறும் சரியான கூற்று

i. தினமும் நல்ல நீரைப் பருகவும்
ii. கொதித்து ஆறிய நீரைப் பருகுவோம்
iii. கொதிநீரைக் குடிப்போம்
iv. சுத்தம் சுகம் தரும்.

49. இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய வனம்

i. மிகிந்தலை ii. குமண iii. வில்பத்து iv. சிங்கராசவனம்

50. வாளைத் தீட்டப் பயன்படும் உபகரணம் எது?

i. வாள் ii. அரம் iii. உளி iv. தீதாள்

51. ஹஜ் பெருநாளைக் கொண்டாடும் இனத்தவர்?

i. சிங்களவர் ii. முஸ்லிம் iii. தமிழர் iv. பறங்கியர்

52. எமக்குத் தகவல்களை நேரடியாக வழங்கும் செவிவழி ஊடகம் அல்லாதது?

i. பத்திரிகை ii. வானொலி iii. தொலைபேசி iv. ஒலிபெருக்கி

53. முட்களுடன் கூடிய மேற்பரப்பைக் கொண்ட பழம்

i. பலாப்பழம் ii. அம்பரலங்காய் iii. மாம்பழம் iv. மாதுளம்பழம்

54. கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின் போது போட்டி ஒரு குழுவில் பங்குகொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை யாது?

i. 11 ii. 13 iii. 15 iv. 9


55. “புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே....’ என்பது

i. தோணிப்பாடல் ii. அரிவுவெட்டுப்பாடல்
iii. வண்டி ஓட்டும் பாடல் iv. கும்மிப்பாடல்

The National e-learning Portal for The General Education

56. “திஸ்ஸ வாவியைக் கட்டுவித்த மன்னன்

i. மகாசேனன் ii. தேவநம்பியதீசன் iii. பராக்கிரமபாகு iv. துட்டகைமுனு

57. 

இவ் உருவில் காணப்படும் உடுத்தொகுதியின் பெயர்

i. கார்த்திகை ii. வேட்டைக்காரன்
iii. ஓராயன் iv. தேள்

58. தேனில் அமிழ்த்தி வைத்துப் பாதுகாக்கப்படும் உணவுப்பொருள்

i. மீன் ii. தேசிக்காய் iii. கருவாடு iv. இறைச்சி

59. ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்த ஆண்டு எது?

i. *கி.பி 1505* ii. *கி.பி 1658* iii. *கி.பி 1796* iv. *கி.பி 1948*

60. உருவிலுள்ள கொண்ணிலை



i. இயல்பாக நிற்றல்
ii. கவனமாக நிற்றல்
iii. இலகுவாக நிற்றல்
iv. கவனயீனமாக நிற்றல்

*(30 புள்ளிகள்)*

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 06 இன் விடைகள்

**தரம் - 05** **6** **வினாத்தாள் - II**

01. i) வரக்காப்பொல ii) சென்றோம் iii) தொழிற்சாலை
iv) அங்குமிங்கும் v) வியப்பாக vi) வெண்மை + நிறம்

02. i) ஆளுநர் ii) தொடங்கியது iii) ஒளிந்து

03. i) அரவு ii) மடக்கேறு

04. i) துயில் ii) ஈகை

05. i) செம்படவன் ii) கரும்பு iii) பருப்பு

06. i) பாதையில் பாறாங்கற்கள் விழுந்து கிடந்தன.

07. i) பிடிவாதம் ii) ஏமாற்றுதல்

08. i) சகபாடி ii) உடன்பாடு / சமாதானம் / சமரசம்

09. i) சீரைத் தேடின் ஏரைத் தேடு / உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்
ii) அடியற்ற மரம்

10. i) பாய்ந்து வெள்ளம் வழிந்தது ii) மன்னும் அன்போடு நீ என்றும்

11. அ i) Pencil ii) Elephant
ஆ Come here?

12. i) சி(க்) குறா (Dh) தா ii) லியன்ன

13. i) எனக்குப் புத்தகம் தாருங்கள் ii) பஸ் வண்டி வந்து விட்டது / பஸ் வந்துவிட்டது

14. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளியிடுக.

15. நாற்பதாயிரத்து தொண்ணூற்று மூன்று

16. i. xiv ii. 19

17. 8

18. i) நான்முகி ii) நான்கு

19. i) 22 : 10 மணித்தியாலம் ii) பி.ப 7. 40 மணி

20. i) $\frac{2}{4}$ , $\frac{4}{8}$ , $\frac{5}{10}$ ii) 1 . 7

21. 102

22. i) 32 m ii) 40 சதுரமீற்றர்

23. i) 35 ii) 21

24. 202, 2 மீதி

25. 1700g

26. 840g

27. 500ml

28. i) 0.4 ii) $\frac{6}{10} = \frac{3}{5}$

29. i) 38 . 50
ii) 98 . 00
51 . 00
187 . 50

30. ரூ. 312.50

31. iv

32. iii

33. iv

34. iv

35. ii

36. ii

37. ii

38. i

| | | | | |
|---|---|---|---|---|
| 39. iii | 40. ii | 41. i | 42. ii | 43. iii |
| 44. iv | 45. iii | 46. ii | 47. i | 48. ii |
| 49. iv | 50. ii | 51. ii | 52. i | 53. i |
| 54. i | 55. i | 56. ii | 57. i | 58. iv |
| 59. ii | 60. iii | | | |